

# மௌனம்

# மௌனி பாபா

மனிதனுக்கும் இறைவனின்
விந்தைக்குமிடையேயான
முதல் சந்திப்பு
மௌனத்தினால்தான்
சாத்தியம்

# மௌனம்

## மௌனி பாபா

பாபாஜியின் கிரியா யோகமும் வெளியீடுகளும்
செயின்ட் ஈட்டின் த போல்டன், கனடா.

Silence

by Mouni Baba

Babaji's Kriya Yoga and Publications, Inc.
196 Mountain Road, P.O. Box 90,
Eastman, Quebec, Canada J0E 1P0
Telephone: 450-297-0258; 1-888-252-9642; fax: 450-297-3957

www.babajiskriyayoga.net · email: info@babajiskriyayoga.net

Copyright © 2013 by Babaji's Kriya Yoga and Publications, Inc.

All rights reserved. No part of this pamphlet may be reproduced or utilized in any form or by any means, electronic or mechanical, including photocopying, recording, or by any information storage and retrieval system, without permission in writing from the publisher.

Cover design and graphic layout: David Lavoie
Cover page is a portrait drawing of Mouni Baba done in 1971

## பதிப்பாளரின் முகவுரை

ஞானிகளின் படைப்புக்களை, அவற்றினுள் ஊடுருவியுள்ள உண்மை ஆன்மாவைத் தொடும்வரை மீண்டும் மீண்டும் படியுங்கள். மௌனத்தில் அவற்றின் வெளிப்பாடுகளைக் கேளுங்கள்.

உள்ளிருக்கும் பரமகுருவைக் கண்டுபிடிக்காமல், ஸ்தூல, சூட்சும காரண சரீரங்களுடன் பிரதானமாக அடையாலப்படுத்திக்கொள்வது வாழ்க்கையிலும் சாதனையிலும் திண்டாடச் செய்யும். உங்கள் ஆன்மா வெளிப்பட்டு முன்னேற்றத்தை நோக்கி அழைத்துச் செல்லும்வரை, முன்னேற்றம் நிச்சயமாக ஏற்படும் என்ற புரிதலோடு மௌனத்தில் கேட்கப் பழகுங்கள். உங்கள் இருப்பு ஆன்மாவை நோக்கித் திரும்புவதால் நாளடைவில் உங்கள் சாதனை இயற்கையாக எவ்வித சிரமமும் இன்றி மலர்ந்து, வரையறையற்ற மகிழ்ச்சி அன்பு மற்றும் உண்மையின் தரிசனம் ஆகியவற்றிற்கு வழிவகுத்து உயர் உணர்வு என்ற வார்ப்பில் இடப்படும்.

கேரளத்தில் பிறந்த ஸ்ரீ மௌனி பாபா (1930-2010) ஸ்ரீ ஸ்ரீ ஷிரிடி சாயிபாபாவின் குருபரம்பரையில் தோன்றிய பரமகுரு ஆவார். அதனால் அவர் கடந்த ஐம்பது ஆண்டுகளாக மௌனியாக இருக்கும்போதும் பிறருக்கு அருள்புரியும் சக்தியையும் அதிகாரத்தையும் பெற்றிருந்தார். பாபாவின் சீடரும் அவரது இனிய அன்பையும் அருளையும் நேரிடையாகவும் சாட்சியாகவும் அனுபவித்தவருமான ஸ்ரீ ஹரி நாராயணன் அவர்களால் இந்த நூல் பாபாஜியின் கிரியா யோக பதிப்பாளர்களின் மூலம் உலகமக்கள் அனைவருடனும் பகிர்ந்து கொள்ள இங்கு அளிக்கப்படுகிறது. உபநிஷத்துகளின் ஆழத்தை இந்நூல் பெற்றிருப்பதால் ஸ்ரீ ஹரிநாராயணன் அவர்கள் இந்நூலை மௌன உபநிஷத் என்று அழைக்க விரும்புகிறார்.



மௌனம்

மனிதனுக்கும் இறைவனின் விந்தைகளுக்கும் இடையேயான முதல் சந்திப்பு மௌனத்தின் மூலமே ஏற்படுகிறது. கருணை வள்ளல் பாபாவின் இருப்பு மௌனத்தால் நிரம்பியுள்ளது. அதிலிருந்து எந்த நிமிடமும் வார்த்தை வெளிப்படும் என்று தோன்றினாலும் வெளிவருவது பெரும் மௌனமே. கடவுளின் மௌனம் உண்மையானது. மௌனத்தினால் அவர் தனது அன்பர்களின் அன்பை ஏற்றுக்கொள்கிறார், மௌனத்தினால் அவர் தன்னை இல்லை என்று கூறுபவர்களிடம் அன்பு செலுத்துகிறார்.

ஞானிகளின் மௌனம் பூடகமானது, பொருள் புரியாதது. மௌனம் பூரணமானதாக இருந்தால்தான் மறைபொருளின் வெளிப்பாடு சாத்தியமாகிறது. ஒரு ஞானியின் மௌனம் அவரது ஆசீர்வதிக்கப்பட்ட உள்ளார்ந்த விடுதலையின் வெளிப்பாடு. அவர் தனது மௌனத்தில் இறைவனின் புனித சொல்லின் ஆனந்தப் பாடலைக் கேட்கிறார். மௌனத்தில் இறைவன் நிரந்தரமாகப் பாடிக்கொண்டிருக்கிறார். அவரது அளவற்ற மௌனத்தை அனுபவித்தவர்களே அதைக் கேட்கின்றனர். அவரது மௌனம் குரல்களின் சத்தத்தையும் தாண்டி ஆட்சி செலுத்துகிறது. மௌனத்தின் மூலம் மனிதனால் தன்னை இறைவனிடம் முழுவதுமாக அர்ப்பணிக்க முடியும். அப்பொழுது இறைவன் அவனுக்குத் தனது முழுப் பெருமை, கட்டற்ற சக்தி, எல்லையற்ற ஞானம், மறைவற்ற இருப்பு ஆகியவற்றை காட்டுகிறார்.

மௌனம்- அது தூய இருப்பு. பரிபூரண மௌனத்தில் தொடக்கமுமில்லை முடிவுமில்லை. அதுதான் ஒரே உண்மை. அதுவே பிறப்பும் இறப்புமற்ற இருப்பு. என்றென்றும் எல்லாவற்றினுள்ளும் இருக்கும் உண்மைப் பொருள் மௌனமானாலும் ஒரு சிலரே அதை உணருகின்றனர். இந்த அனுபவம் பிற அனுபவங்களைவிட வேறுபட்டது. மௌனத்தை அனுபவிப்பது என்பது தான் அதில் கரைந்துபோவது. ஒருவர், இறைவனைக் காண, அனைத்தையும், தன்னை உள்பட, தொலைக்க வேண்டும். முந்தைக்கு முன்னிருந்து முடிவற்ற முடிவு வரை

பேசிய சொற்கள் அனைத்தும் இறைவனின் எல்லையற்ற மௌனத்தில் தொலைய வேண்டும். பரிபூரண மௌனத்திலிருந்து வெளிப்படும் சொல் ஆசீர்வதிக்கப்பட்டது. இந்த சொல்லால்தான் இறைவன் உலகைப் படைத்தார். மௌனத்தில்தான் இறைவனின் வார்த்தையைக் கேட்க முடியும். மௌனம் என்பது பேச்சை நிறுத்துவதல்ல; அதற்கும் மௌனத்திற்கும் வெகுதூரம். மௌனம் வழிகாட்டும் சக்தியாக இருப்பதை நிறுத்தும்போது சும்மா இருப்பது என்பது சோம்பேறித்தனமாகிறது. ஒருவர் தன்னை சோம்பேறித்தனம் ஆக்கிரமிக்க அனுமதித்தால் அவரது வாழ்க்கை மிகச் சோகமானதாக மாறுகிறது. மௌனம் என்பது செயலற்று இருப்பதல்ல. அது எல்லா செயல்களையும் செயலின்மையையும் கடந்தது.

மௌனத்தைத் தவிர வேறோன்றுமில்லாத உலகத்தை நீங்கள் கற்பனை செய்து பார்த்திருக்கிறீர்களா? மௌனஉலகில் நித்தியத்துவம் உள்ளது. மௌனத்தில் தூய காலம் அதன் இல்லாமையாக இருக்கிறது. மௌனம் என்பது அடிப்படைத் தத்துவம். அதற்கு வேறொரு மூலமில்லை. மௌனத்தில் மனிதன் உயிர்களின் உண்மையான இருப்பைக் காண்கிறான். மௌனத்தில், எல்லையற்றதும் வரம்புக்குட்பட்டதும் சேர்ந்திருக்கின்றன. மௌனம் பேச்சற்று இருக்கலாம். ஆனால் பேச்சு மௌனத்தைவிட்டு இருக்கமுடியாது. வாழ்க்கை என்னும் மரத்திற்கு மௌனம் என்னும் உரத்தை இட்டால், மகிழ்ச்சியும் திருப்தியும் மலரும். மனிதனின் துன்பமும் இன்பமின்மையும் மௌனத்தின் உடைப்பினால் ஏற்பட்டவையே. தற்காலத்தைய மனித வாழ்க்கையைப் பார்க்கும்போது நான் மௌனத்தின் அழிவையே காண்கிறேன்.

மனிதர்களின் வார்த்தைகள் அதிகாரபூர்வமானவை அல்ல. அடிப்படையில் எல்லா வார்த்தைகளும் எல்லைக்குட்பட்டவை, இணக்கமானவையல்ல. ஏனெனில் அவை உண்மையை சூசகமாத்தான் வெளிப்படுத்துகின்றன. மோட்சப்பாதை இருக்கும்வரை வார்த்தைகள் பயனுள்ளவையாக இருக்கின்றன. ஞானிகளின் வார்த்தைகளிலிருந்து பெரும் ஊக்கத்தைப் பெறலாம். விசுவாசமான ஒருவருக்கு வழிகாட்டுவதைவிட மிக எளிதாக உலகத்திற்கே வேதாந்தத்தைக்

கற்றுக்கொடுத்துவிடலாம். இலக்கணம், தர்க்கம், சொல்லாடல், விரிவான விளக்கங்கள் ஆகியவை அறியாமை தன்னைப் போர்த்திக்கொள்ளும் போர்வைகளாகும், அழுகலாகும். உண்மையான தேடுதலை உடையவர்கள் ஆன்மீகப் பாதையில் அடக்கத்துடன் மௌனமாக நிர்மலமான இறைவனின் வழிநடத்தலுடன் நடப்பர். நித்தியமான இறைவனை மனிதன் உணர்ந்தால் மனிதனின் கர்மங்கள் முடிந்து போகின்றன; அவன் தனது இலக்கை அடைகிறான். “இப்பொழுது” அடையும் இலக்கு ஒன்றே உணர்வில் இருக்கிறது. தற்போதைய நொடியில் வாழ்ந்தால் இலக்கு என்ற ஒன்று இல்லை.

தேடுவதைத் துறப்பதில் இருக்கிறது அமைதி. ஆனால் அதை மனக் கட்டுப்பாட்டினாலோ வெளியுபகரணங்களினாலோ பெற முடியாது. நீங்கள் தயாராக இருக்கும்போது துறவு ஏற்படுகிறது. தனது குடும்பத்தைவிட்டு ஓடுவது துறவல்ல, தீர்வல்ல. அவ்வாறு ஓடுபவர்கள் எப்பொழுதும் விடுதலை பெறுவதில்லை. விடுதலை என்பது ஒன்றை உருவாக்குவது; கட்டுத்தளை என்பது தனது சூழ்நிலையைவிட்டு ஓட முனைவது. மௌனம் கதவைத் தட்டும்போது அதற்குத் தயாராக இருங்கள். எல்லாவற்றையும் துறந்து அத்தகைய துறவின் மூலம் உங்களுக்குச் சொந்தமானதை அறிந்துகொள்ளுங்கள். விடுவது என்பது பொருட்களைத் துறப்பது மட்டுமல்ல. உங்கள் புலன்களை உங்கள் கட்டுக்குள் வைத்திருந்தீர்களானால் அதைக் கட்டுப்படுத்துவதை விட்டு அவற்றைப் பரிபூரணத்திடம் துறந்துவிடுங்கள். அதன் பிறகு அந்த ஆனந்தசக்தி, ஆயிரம் மதவாதிகளினாலும் ஏற்படுத்த முடியாத பெரும் சக்தி, உங்களுள் வந்து உங்களது இருப்பை மாற்றும். அப்பொழுது உங்களது பக்தியின் குறிக்கோளை, ஞானத்தின் ஆளுமையை அறிவீர்கள். முதலும் முடிவும் உங்களுக்குப் புலனாகும். எல்லாவற்றையும்விட, நீங்கள் ‘அறிவீர்கள்’. பிரபஞ்ச உணர்வில் திளைப்பது என்பது தனிப்பட்ட உணர்வை உணராமலிருப்பது. தனிப்பட்ட தன்மையில் இருப்பது என்பது உருக்குலைவாகும். இதை ஒருவர் பரிபூரண மௌனத்தைப்

பெறும்போது உணருகிறார். நிகழ்காலம், இறந்தகாலம், எதிர்காலம் அனைத்தும் மௌனத்தின் நித்தியத்தில் கரைந்துவிடுகின்றன.

உங்களது அறியாமையை மௌனத்தில் உணர்ந்தால் உங்களது மனப்பாங்கு பயபக்தியுடையதாக ஆகின்றது. உணர்தலுடன் கூடிய அறியாமை அடக்கமானது. இறைவனின் அறியாமை மனிதம். மனிதனின் அறியாமை தெய்வீகம். பரிபூரண மௌனம் ஞானம். ஞானம் தனது இருப்பை பொன்மயமான மௌன அலைகளின் மூலம் வெளிப்படுத்திக் கொள்கிறது. ஞானத்தால் ஒருவர் எண்ணங்களைக் கடந்துவிடுகிறார். எண்ணங்கள் என்பது விழிப்புணர்வின் நிழல்கள் ஒரு உருவில் வெளிப்படுவதே எண்ணங்களாகும். இறைவனின் இரகசியத்தைப் பற்றிப் பலர் உபன்யாசங்கள் செய்கின்றனர், சொற்பொழிவாற்றுகின்றனர். இவையனைத்தும் மனித குலத்திடையே ஒரு மாற்றத்தையும் ஏற்படுத்துவதில்லை ஏனெனில் அவை மௌனத்திலிருந்து வெளிபடுபவையல்ல. இறைமை என்பது தர்க்கிக்கப்படுவதல்ல, விவாதிக்கபடுவதல்ல, விளக்கத்துக்குட்பட்டதல்ல. இறைமை என்பது மௌனத்தில் உணரப்படுவது. சத்தம் மௌனத்தை வெற்றி கொள்ளும் என்று தனது அறியாமையினால் மனிதன் எண்ணலாம். தன்னுள் இருக்கும் மௌனம் தூங்கும்போது மனிதன் அமைதியை இழக்கிறான். மனிதனுக்குத் தனது சத்தமாக வாழ்ந்த வருடங்களை நித்திய மௌனத்தின் நொடிகளாக மாற்றும் சக்தியை ஆழ்ந்த மௌனம் தருகிறது. ஆழ்ந்த மௌனத்தில் கடவுள் ஒரு பொருளாக இல்லாமல் ஒரு உணர்வாக, அனுபவமாக இருக்கிறார். சத்தமான உலகில் வாழ்க்கை, மயக்கங்களால், மாயத் தோற்றங்களால் ஆளப்படுகிறது.

இயற்கையின் மௌனம் ஆசீர்வதிக்கப்பட்டது. அது மனிதனுள் நாதம் ஏற்படுவதற்கு முற்பட்ட, அனைத்தையும் உருவாக்கிய பெரும் மௌனத்தைப் பற்றிய ஒரு உள்ளுணர்வை ஏற்படுத்துகிறது. மௌனத்தின் மூலம் ஒருவர் இயற்கையிலுள்ள அனைத்துடனும் தன்னைத் தொடர்புபடுத்திக் கொள்ளலாம். மௌனம் ஒவ்வொருவரிடமும் ஒரே உண்மையாக இருக்கிறது. மௌனத்தை விழித்தெழச் செய்தால்தான் பிற பொய்கள் மீளாத தூக்கத்தில் ஆழ்கின்றன.

மௌனத்தின் அதிசயம் என்னவென்றால் முன்பு எங்கே இறப்பு இருந்ததோ அங்கே இப்பொழுது இறைமை தோன்றுவது.

வார்த்தைகள் என்னும் படகு மௌனம் என்ற ஆற்றில் பயணித்தால் இசை தோன்றும். இசையிலுள்ள மௌனம் என்னைக் கவர்ந்துள்ளது. இசையின் உச்சம் அதன் தற்காலிக நிறுத்தம்; ஒய்வு; மௌனத் துளி; எவ்விதமான சத்தமும் இல்லாமை. பரிபூரண மௌனம் அல்லது அசைவற்ற நிலை என்பது சத்தமின்மையை உருவகப்படுத்துவது. இசையின் கடைசி துளி இறந்த நொடியே மௌனம் வலுவாகக் கேட்கும் நேரமாகும்.

அன்பார்ந்த பாபா நமக்கு மௌனத்தில் பெறக்கூடிய அல்லது கொடுக்கக் கூடிய ஒரே பரிசான அன்பைத் தந்தார். “அதை நெருப்பைப் போல பரப்பு” என்று அவர் கூறினார். அவர் என்னைத் தீயிலிட்டார். அத்தீ ஒன்றையும் விடாமல் உட்கொள்கிறது. ஒருவர் அன்பென்னும் தீயினால் எரியும் புண்ணியத்தைப் பெற்றால் அவர் தன்னை மௌனம் உட்கொள்ள அனுமதிக்கிறார். இதை என்னவென்று வார்த்தைகளால் விளக்க முடியாது.

மௌனம் ஆசீர்வதிக்கப்பட்டது. மௌனத்தினால் நீங்கள் எண்ணங்களிலிருந்து பரிபூரண ஞானம் என்ற முழுமைக்கு உயர்ந்து உங்களது உண்மைத் தன்மையில் நிலைபெற்று இருக்கலாம்.

பிப்ரவரி 24, 1962

All Love
BABA



Contact A. Hari Narayanan

<saitemplehari@gmail.com>

Shirdi Sai Temple, Mammiyur, Guruvayur, Kerala, India

0 487 655 4749

0 966 111 9999

http://www.youtube.com/watch?v=4vobFyTUR8U